கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 24
ஆனி 24 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## ஆபிரிக்க புறுண்டியில் பன்னிரண்டு குருமார் இராணுவ பலி

ஆபிரிக்க கண்டத்தின் மத்தியில் உள்ள தங்கனீக்கா ஏரிப்பிரதேசத்தில் முன்பு பெல்ஜியத்தின் ஆட்சியின் கீழ்ப்பட்டிருந்த றுவண்டா தேசம் 1962-ம் ஆண்டு சுதந்தரமடைந்தபின் புறுண்டி என்னும் சுதேச புதுப்பெயருடன் விளங்கிவந்தது. ஒரு இராணுவ வீரராகிய மிக்கொம்பரோ இன்று அங்கே ஜனாதிபதியாக ஆட்சிபுரிகிறார். அத்தேசத்திலுள்ள சனத்தொகையில் 85சதவீதத்தோர் கத்தோலிக்கர். ஆட்சியின் கொடுமையைச் சகிக்க முடியாது அங்கு அண்மையில் சனங்கள் திரண்டெழுந்ததை அடக்க இராணுவத்தினர் கையாண்ட வன்செயல்களால், ஆண், பெண், சிறார் சுமார் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தனரென்றும் அவர்களுள் 12சுதேச குருமார் அடங்கியுள்ளனரென்றும் செய்திகள் வத்திக்கானுக்குக் கிடைத்துள்ளது. உடனே பரி. தந்தை உண்மை நிலையை அறிந்துவர "கோர் யூனும்" தர்மநிலைய அதிகாரி ஒருவராகிய ஹங்கேரி தேச லாஜொஸ் கடா அடிகளாரை அங்கே அனுப்பியுள்ளார். ஆனால், இருவாரங்களாக அவரிடமிருந்து வத்திக்கானுக்கு ஒரு செய்தியும் எட்டவில்லை.

### அதிமேற்றிராணியார் ஆர்ப்பாட்டக்காரரல்ல

அப்படியல்ல; ஆனால் யாருடைய பிழையாலோ அவர் அப்படிக் கருதப்பட்டுவிட்டார். அன்று லண்டன் மாநகரில் ஐக்கிய அமெரிக்க தேச தூதரகத்துக்கு முன்னாலே எதிர்ப்பாட்டக்காரர்கள் திரண்டு நின்றனர். ஏற்கனவே றெபெட்ஸ் அடிகளாருடன் ஏனைய கிறிஸ்தவ மதத்தலைவர் ஒன்பதின்மர் அடங்கிய குழு ஒன்று அத்தூதரகத்துள் அமெரிக்கதூதருடன், அமெரிக்கர் வியற்னமில் வீசும் குண்டுவீச்சை நிற்பாட்டுமாறு பேச்சு நடாத்திவிட்டு வெளியே போகும் சமயம் ஆர்ப்பாட்டக்காரர் றெபெட்ஸ் அடிகளாரைச் சூழ்ந்துநின்று கரகோஷம் செய்து நிற்க, புகைப்படங்கள் பிடிக்கப்பட்டுவிட்டன. அதிமேற்றிராணியாரையும் ஆர்ப்பாட்டக்காரருள் ஒருவராக்கி விட்டனர் பத்திரிகையாளர். அதிமேற்றிராணியார் றெபெட்ஸ் சிலவருடங்களுக்குமுன் பம்பாய்நகர அதிமேற்றிராணியாராயிருந்து ஓய்வுபெற்று இப்போது இங்கிலாந்தில் வசித்துவருகிறார்.

**கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சி**
அலைவரிசை:
தமிழ்ச் சேவை 1.
ஞாயிறு வாரம்
2-7-72.
"காலங்களில் வாழும்"
இறைவன்
யாழ்; ஆசனக்கோவில்
பங்கு அளிக்கும்
இசை-உரைச் சித்திரம்
தயாரிப்பாளர்:
பிதா ஜோய் கிறிசோஸ்ரம்
நேரம்: 7—7. 30.
மாலை.

## முதல் நன்மையும் பாவசங்கீர்த்தனமும்

பாலவயதில் முதல் நன்மை பெறும் பிள்ளைகள் பாவம் செய்யாதவர்களாயிருப்பதால் முதல் நன்மைபெறுமுன் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டிய அவசியமற்றவர்கள் எனச்சிலர் அபிப்பிராயப்படுதல் நாம் அறிந்த விஷயமே. இவரது எண்ணத்தின்படி சிறுபிள்ளைகள் பாவசங்கீர்த்தனம் செய்யுமுன் திருநன்மையைப் பெற்றுக்கொண்டு, பாவத்தைப்பற்றிய அறிவு ஏற்பட்டபின் பாவசங்கீர்த்தனம் செய்யக் கற்பிக்கப்படலாமென்பதே- இவ்விஷயத்தைத் தேற ஆலோசனை செய்தபின் ஆங்கில-வேல்ஸ் நாட்டு ஆயர் சபையினரின் சார்பில் திட்டவட்டமாகக் கருதினால் ஹீனன் கூறியிருப்பதாவது: "பாலவயதிலேயே சிறுவர் எது சரி, எது பிழை என்பதைப் பல கருமங்களிலும் உணர்ந்து கொள்கின்றார்கள். இந்த உணர்வின் அடிப்படையில் அவர்கள் பாவசங்கீர்த்தனம்செய்து தம்மைத்திருத்திக் கொள்வதற்கு திருநன்மையின்முன் பாவசங்கீர்த்தனம் செய்துகொள்ளும் நல்ல வழக்கம் தொடர்ந்து இருக்க வேண்டும். ஆனால், பாலரின் வயதுக்குத் தக்கவிதமான முறையில் அவர்களை ஆயத்தப் படுத்துவது முக்கியமாகும்.

### கன்னியாஸ்திரிக்கு எம்.பி.ஈ. பட்டம்

அருட்திரு சகோதரி மௌறின் ஹேஸ்ற் என்பவருக்கு ஆங்கில நாட்டில் மிக மதிப்புக்குரிய எம். பி. ஈ. பட்டம், அவரது விஞ்ஞான சாஸ்திர அறிவின் திறமைக்காகவும், அந்த அறிவினால் அவர் செய்துவரும் சேவைகளுக்கு நன்றி பாராட்டுவதற்காகவும் இந்த மாதம் மகாராணி இரண்டாம் எலிசபேத் அம்மையாரின் பிறந்த தினக் கொண்டாட்டத்தில் அன்று அருளப்பட்டுள்ளது. சகோதரி மௌறின் அவர்கள் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் பௌதிக சாஸ்திரத்துறையில் உழைத்து வருவதுடன், பள்ளிக்கூடங்களுக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவ்விஞ்ஞானத்துறையில் மிக ஆர்வத்துடன் சேவை செய்கின்றார்.

## இதுவே சிறந்த வகை

ஐரோப்பிய தர்மஸ்தாபன உபதலைவர் யூவான் மசிப்என்பவர் தமது ஸ்தாபனம் செய்யும் தர்மவேலைகள் ஒருபுதிய நோக்கத்துடன் ஆகிவருவதைக் குறிப்பிட்டிருக்கின்றார். துன்பப்படும் ஒரு தேசத்துக்கோ அல்லது தனிநபருக்கோ உதவி கொடுக்கும்பொழுது அவ்வுதவியால் தற்காலிகமாகத் துன்பத்தை நீக்குவதே நோக்கமில்லாது அதைக் கொண்டு உபயோகித்து நிரந்தரமாக அத்துன்பத்தைநீக்க உதவுவதே சிறந்ததெனக் கொண்டு இக்கொள்கையின் அடிப்படையில் தமது தர்மஸ்தாபனம் பெரும்பாலும் உதவிவருவதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

## வியற்னும் யுத்த அகதிகளுக்குப் பிரித்தானிய கத்தோலிக்க சிறாரின் உதவி

வியற்னம் தேசத்தில் நடந்துவரும் யுத்தத்தினால் பலவகை இன்னல்களுக்கு ஆளாகியிருக்கும் பல்லாயிரக் கணக்கானோருக்கு ஓரளவு உதவி புரியுமாறு உலகின் பல பாகங்களிலும் நிதிகள் திரட்டப்பட்டு வருகின்றன. பிரித்தானிய தேசமும், அங்குள்ள கத்தோலிக்கரும் இக்கருமத்தில் பெருமுயற்சி எடுத்து வருவது பாராட்டுதற்குரியது. பிரித்தானிய தேச பள்ளிக்கூடச் சிறாரின் முயற்சியின் பயனாக சென்ற வாரம் மூவாயிரம் ஆங்கில பவுண் பெறுமதியான பணம் அத்தேச மேற்றிராணிமார் நடாத்திவரும் தருமசேவைக்கு அனுப்பப்பட்டுள்ளது, தர்மசிந்தனை பள்ளிக்கூடச் சிறார் மத்தியில் வேர் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆங்கிலநாட்டில் இத்தகைய தர்மமுயற்சிகள் வளர்ந்து வருகின்றன.

## உயர் நீதிமன்ற நீதியரசர் ஜயபத்திரானா அவர்களுக்கு சம்பத்திரிசியார் பழையமாணவரின் உபசரணை

இம்மாதம் 11-ம் திகதி இரவு சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்சங்கம் அக்கல்லூரிப் பழைய மாணவரில் ஒருவராகிய நீதியரசர் ஜயபத்திரானா அவர்களுக்கு கல்லூரிமண்டபத்தில் இராப்போசன விருந்து அளித்து, அவரது உயர்பதவி நியமனத்தினால் தமக்குள்ள மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். விருந்தின்போது கல்லூரி அதிபர் அதிவண. மதுரநாயகம் சுவாமியாரும், நீதிபதியின் உடன்மாணவருள் ஒருவரும் தற்போது மேலதிக வடபகுதி அரசாங்க அதிபராகக் கடமையாற்றுவருமாகிய ஏ. ஏ. ஜோசவ் அவர்களும், நீதிபதியின் பழைய ஆசிரியர்களாகிய திரு. எவ். என். சி. சவிரிமுத்து, எம். ஜேக்கப் அவர்களும் சொற்பொழிவாற்றி நீதிபதியின் குணவிசேஷங்களையும், ஆற்றல் திறமைகளையும் பாராட்டினர். ஜயபத்திரானா அவர்களுக்கு அவரது பழைய பள்ளிக்கூடத்திலும் தமிழ்மக்களிலும் உள்ள அன்பு என்றும் குறையாத் தன்மையுடையதென வியந்துரைக்கப்பட்டது. நீதிபதியவர்கள் தமது நன்றியுரையில் மிக உணர்ச்சியுடன் இப் பள்ளிக்கூடத்துக்கும், அதன் தலைவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்தமக்குள்ள கடமைப்பாட்டை விளக்கி, என்றும் அழியா நன்றியைக் கூறித் தம்மைவளர்த்தயாழ்ப்பாணத்துக்கு என்றும் பிரமாணிக்கமுள்ள புத்திரனாய் கடமையாற்ற வாக்களித்தார்.

### முற்றுப்பெறாத விவாக விசாரணை முடிவு விரைவுபடுத்தும் முறை

சென்ற வாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் விடுத்துள்ள அறிக்கையின் பயனாக, முற்றுப்பெறாத விவாகவிசாரணைகளின் முடிவு முன்னிலும் மிகக் குறைந்த காலத்தில் அறியக் கூடியதாக இருக்கின்றது. ஒரு விவாகம் முற்றுப் பெற்றதா அல்லவாஎன வத்திக்கான் நடத்தும் விசாரணையில் காலதாமதம் ஏற்படுத்தும் காரணங்களை ஆராய்ந்து அவற்றைக் கூடியளவு அகற்ற வழிவகைகள் எடுக்கப்பட்டுள்ளது. பிரதேச ஆயர்மார் இது கருமத்தில் முன்னிலும் பார்க்க கூடிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனர்.

### மேலும் ஒரு விருத்தாப்பிய குருவானவர்

இருவாரங்களுக்குமுன் ஐக்கிய அமெரிக்க தேசத்தில் 80வயது நிரம்பியஒருவர் கத்தோலிக்க குருவாக அபிஷேகம்பெற்ற செய்தியை அறிவித்திருந்தோம். இவ்வாரம் இத்தகைய நற்செய்தி ஒன்று மேலும் கிடைத்திருக்கின்றது. ஆங்கில நாட்டிலே 79 வயதுநிரம்பிய றிச்சட் மூர்டாக் என்பவரே இவர். இப்பெரியார் கத்தோலிக்க உயர்தர பாடசாலைகள் இரண்டின் தலைவராகவும் பின் நியாயதுரந்தராகவும் கடமையாற்றியவர். வழக்கறிஞர் வேலையில் உயர் பதவிகள் அவரை வரவழைத்தனவெனினும் அதை விரும்பாது குருபதவியையே அவர் தெரிந்துகொண்டார். இளம் பராயத்திலேயே இவர் மனைவியை இழந்துவிட்டார்.

### புளிக்காரம்போன்ற கிறிஸ்தவர்களை உருவாக்கவேண்டும்

சென்றமாதம் அமலோற்பவ மரியன்னையின் தியாகிகள் சபைத்தலைவர்மன்றம் றோமாபுரியில் ஒன்றுகூடி அவர்களுக்கு ஒரு புதிய தலைவரைத் தேர்ந்துகொண்ட சில தினங்களுக்குப் பின் பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரைத் தரிசித்து அளவளாவிய போது அவர், அப்பமாவின் புளிக்காரம்போன்ற நல்ல கிறிஸ்தவர்களைச் சமூகத்தில் உருவாக்க அமலோற்பவ தியாகிகள் விசேஷகவனம் எடுத்துவர அவர்களைக்கேட்க்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இந்தக்காலத்தில் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளைச் சரியான பாதைக்கு நடத்திச் செல்லாததற்குக் காரணம், அவர்களே அந்தப் பாதையில் நடக்காதது தான்.
>
> — ஓர் அறிஞர்

சத்தியவேத பாதுகாவலன்

# பூரணத்துவத்துக்கு வழி

"உங்கள் பிதா பூரணராய் இருப்பது போல நீங்களும் பூரணராயிருங்கள்" என்பது கிறிஸ்துவின் வாக்கு. கிறிஸ்தவனின் கடமை தன் வாழ்வைப் பூரணமாக்குவது. இப்பூரணத்துவத்தை மனிதனுக்கு அளிப்பது என்ன என்பதைச் சற்றுச் சிந்திப்போம். மனித வாழ்வின் இலட்சியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்று எம்முன்னோர் வகுத்தனர். இந்தப் பொன்மொழி கிறிஸ்தவனுடைய வாழ்வுக்கும் பொருந்தும். அறமெனப்பட்டது ஒருவனது கடமைகள், நற்செயல்கள், செபங்கள் அடங்கிய இறைவாழ்வையும், பொருளெனப் பட்டது தொழில், செல்வம், பொதுநலன் முதலியவற்றைக் கொண்ட புறவாழ்வையும், இன்பம் எனப்பட்டது இல்வாழ்வு, பண்பாடு, பொழுது போக்குகள் முதலியவற்றைக் கொண்ட சுகவாழ்வையும் குறிப்பனவெனக் கொண்டால் இம்மூன்று துறைகளிலும் நிறைவு காணுவதன் மூலம் வீடு என்னும் மோட்சத்தை அடைய வழிசெய்து கொள்கிறுன்.

மனிதன் தனது செபங்கள், நற்செயல்களால் மட்டுமன்றி, தனது தொழிலாலும் தான் அனுபவிக்கும் இன்ப துன்பங்களாலும் இறைவனது நோக்கத்திற்குத் தக்கபடி தன் வாழ்வின் பயனை அடைந்து கொள்ள முடியும். அதில் நிறைவைக் காணமுடியும்.

மனித வாழ்வைப் பூரணமாக்குவது இறைவன். ஆகவே அறவாழ்வு அல்லது இறை வாழ்வின்றி மனிதன் நிறைவு பெற முடியாது. இறைவனின் அன்புக்காக நேரடியாகச் செய்யப்படும் நற்கிருத்தியங்கள் ஒருவரைப் பூரணப்படுத்துவன என்பது தானே விளங்குகின்றது. ஆனுல் ஒருவன் செய்யும் தொழிலும், அவனது பொழுது போக்குகளும் நிறைவை அளிக்கும் சாதனங்களெனக் கூறும்போது அதற்கு விளக்கம் தேவைப்படுகின்றது.

இறைவனது நோக்கத்தை நிறைவேற்றும் போதெல்லாம் மனிதனது செயல் பூரணத்துவத்தை நோக்கி அவனை இட்டுச் செல்கிறது. இறைவனது படைப்புப் பணியைத் தொடர்ந்து நடத்துவதும், உலகை இன்பகரமான ஓர் இடமாக்குவதும், அந்த இன்பத்தை தானும் நுகருவதும் இறைவன் மனிதனிடம் ஒப்படைத்த வேலைகளாகும். தொழிலின் மூலம் மனிதன் படைப்பை மேற்கொள்ளுகிறுன். தனக்கும் பிறருக்கும் வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்தும், புதுக் கருவிகளைக் கண்டு பிடித்தும், இறைவனின் படைப்புத் தொழிலை தொடர்ந்து செய்கிறுன். இவ்விதமாகவே மனிதன் ஏற்படுத்திய கலைகளும் பொழுது போக்குகளும் அவனது உடலுக்கும், உள்ளத்துக்கும், இதந்தந்து வாழ்வுக்கு இன்பத்தைக் கொடுக்கின்றன.

தமக்குப் பணியும் வழிபாடும் இயற்றுவது மட்டுமல்லாமல் உலகைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்யவும், உண்மையான இன்பத்தை மறுமையில் மட்டுமன்றி இம்மையிலும் காணவும் மனிதன் உழைக்க வேண்டுமென்பது இறைவனின் சித்தமாகும். இறைவனுடைய நியதிப்படி நடப்பதே ஒருவரைப் பூரணப்படுத்துவதற்கு வழியாகும்.

## நமது சர்வகலாசாலையில் மதபோதன பீடங்கள்

இலங்கைச் சர்வகலாசாலையில் இந்நாட்டுச் சமயங்களுள் பௌத்த மதத்துக்கு மாத்திரம் போதன பீடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மறு சமயங்களாகிய சைவம், இஸ்லாமியம் கிறிஸ்தவம் ஆகியவற்றுக்கும் இத்தகைய உரிமை அளிக்கப்பட வேண்டுமெனப் பல வருடங்களாக வாதாடியும் செவிடன் காதில் ஊதப்பட்ட சங்காகவே இவ்விண்ணப்பங்கள் ஆயின. இந்த அநீதியை அகற்ற தற்சமயம் ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. சர்வகலாசாலைப் படிப்பு விஷயங்கள் யாவும் திருத்தி அமைக்கப்பட இருக்கின்றன. ஆகவே இதுகாலவரையும் செய்யப்பட்ட பிழையைத் திருத்தி, பௌத்த மதத்துக்கு உள்ளது போலவே ஏனைய சமயங்களுக்கும் உயர் போதன பீடங்கள் அமைத்துக்கொடுக்கத் தவருதிருப்பின் இந்நாட்டுக்கல்வி அதிகாரிகள் உண்மையாகவே கல்வி முறைச் சீர்திருத்தவாதிகள் என்பதை நிரூபித்துவிடுவர்.

# யேசுவின் அதி பரி. இருதயம்

ஆண்டவருடைய திருவிருதயத்தின் ஆலோசனைகளோ அவர்கள் ஆன்மாக்களை மரணத்தினின்று விடுவிக்கவும், பஞ்சத்தில் அவர்களுக்குச் சவாட்சணை செய்யவும், தலைமுறை தலைமுறையாக நிலைகொள்ளும் (32-ம் சங்கீதம் 11, 19). நீதிமான்களே அகமகிழுங்கள்; அவரைப் புகழ்ந்து ஏத்துங்கள்என்று சங்கீதங்கள் இன்னுரை புகல்கின்றன.

இறைவன் மனிதர்மேல் கொண்டுள்ள மாருத அன்பினுல் பாவிகளின் மீட்புக்காகத் தமது ஏகசுதனை இவ்வுலகிற்கீந்தார். பாவிகளின் நிமித்தம் சிலுவையிற் பலியான யேசுவின் மதுரமான இருதயம் மானிடரின் அக்கிரமங்களின் நிமித்தம் நொருக்கப்பட்டது. நொருங்கிக் காயமுற்று இணையில்லாத அன்புச் சுடர்வீசி நேசச்சுவாலை மூண்டெரியும் யேசுவின் திருவிருதயம் சிலுவையிற் தொங்கியது. எல்லோராலும் கைவிடப்பட்டுத் தவியாய்த்தவித்தது. ஆன்மதாகத்தினுல் முறையிட்டு வாடிவதங்கி வருந்தியது. காயமுற்று வருந்திய யேசுவின் திருவிருதயத்தின் மூலமாய்த்தான் இறைவன் தமது நேசத்தின் அளவில்லாத பொக்கிஷங்களை எங்களுக்கு ஈந்தருளத் தயைபுரிந்தார். ஆதலால் இறைவனின் அன்புச் செயல்களை நினைந்து அவருக்கு நாம் நன்றியறிந்த தோத்திரம் புரிவது நமது காத்திரமிக்க கடனன்ருே?

யேசுவின் திருஇருதயம் மானிடர்க்குத் தேவஞானத்தை வெளிப்படுத்தியது. அலையிலும், மலையிலும், நகரிலும், சிற்றூர்களிலும் மக்கள் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும், ஜீவன் தரும் தேவ வார்த்தைகளை அள்ளிச் சொரிந்தது. வானவர்க்கே அதிசயமாய் விலைமதித்தற்கரிய திரவியமாய்ப் புனிதமிகு கன்னிமரியாயின் திருஉதரத்திற் பரிசுத்த ஆவியினுல்உருவாகித் தயாளமும், சிநேகமும் நிறைந்ததாய் ஞானமும் அறிவுமான பொக்கிஷங்களால் நிரம்பிப் பரம கொடைகளைத் தன்னகத்தினின்று சொரிந்து இருதயங்களுக்கெல்லாம் அரசராய் ஆட்சிபுரிந்து நீதியும் சமாதானமுமுள்ள ஞான இராச்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபித்து உன்னத மகிமையுற்று விளங்கும் யேசுவின் திருஇருதயத்தின் அன்புக்கு எல்லையுண்டோ?

அளவில்லாத அன்பினுல் ஆண்டவர் அன்று சிலுவையிற் தொங்கி அனைத்துலகிற்கும் கருணைமழை பொழியத் தமதுதிருவிலா திறக்கப்படத் திருவுளங்கொண்டார். "போர்ச் சேவகன் ஒருவன் ஈட்டியினுல் அவருடைய திருவிலாவைத் திறந்தான்; அதினின்று இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது" என்று புனித அருளப்பர் தமது நற்செய்தியில் கூறுகின்ருர்.

"உன் திருஇரத்தம் ஒருதுளி முதலாய் உனக்கென வைத்தாயோ? ஓய்வில்லா அன்பால் உன்னையே மறந்தாய் ஓ! திரு இருதயமே" என்று பண்பாடி யேசுவின் திருஇருதய நேசத்தை நினைந்து இரங்குகின்ருேம்.

ஒருதுளி இரத்தமும் தனக்கென வைத்திராத யேசுவின் தயாளத்தை என்னென்போம். இவ்வாறு தமது உதிரமெல்லாம் சிந்தித் தமக்கு மனிதர்மீதுள்ள மாருத அன்பைக் காட்டுதற்காகவும் வரப்பிரசாதங்களை அவர்கள் மேல் ஏராளமாய்ப் பொழிவதற்காகவும் இடையருது தமது இருதயம் திறந்திருக்கத் திருவுளங்கொண்டார் சிநேகத்தின் திருவுருவான யேசு.

உலகின் உண்மைச் சுடரே! நித்திய ஞானஒளியே! நேசத்தின் அக்கினி மூண்டெரியும் யேசுவின் திருஇருதயமே! குளிராய் இருக்கிற எங்கள் இதயங்களை உமது நேசத்தின் அக்கினியினுல் எரிக்க வந்தீர்! நீர் சிலுவைமரத்திற் தொங்கியபோது ஈட்டியாற் குத்தித் திறக்கப்பட்ட உமது திருவிலாவே உமதுமேற் தாகங்கொண்ட எங்கள் ஆன்மாக்களுக்கு நித்தியசீவியம் சுரக்கும் ஜீவசலமுள்ள ஊறணியென்றுகண்டுகொண்டோம். ஆதலால் நித்திய சீவியத்தின் ஊற்ருகிய தேவரீருக்கு எங்களை நல்மனதோடு கையளிக்கின்ருேம் என்று நாம் அனைவரும் யேசுவின் திருஇருதயத்திற்கு நம்மையும் நமது குடும்பங்களையும் அர்ப்பணித்தல் வேண்டும்.

அன்று குருசினில் மூன்று ஆணிகளிற் ருெங்கிக் கொலைஞர்கள்மீது இரங்கி அரியபிதாவை மன்ருடி ஆருயிர்தன்னை ஈந்த யேசுவின் மதுரம்நிறைந்த இருதயம், இன்று உலக பாவக்காட்சியால் உருகித் துடித்துச்சோபித்துக்கலங்கி நொந்து துயருறுகின்றது. மானிடர்மீது நேசத்தினுல் நிறைந்து அருட்கொடைகளை அள்ளிச் சொரிவதற்காக இடையருது திறக்கப்பட்டிருக்கும் அந்த இருதயந்தான், "எனக்கு ஆறுதலை அளிக்கக்கூடிய ஒருவனைத் தேடியும் நான் காணவில்லையே" என்று முறையிட்டது.

குரூர மனம்படைத்த யூதர்களாற் தாம் கொலைசெய்யப்படுமுன்னர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்தஇராத்திரியிலே தேவநற்கருணைமூலமாகத் தம்மையே பரமபிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுக்க அன்பினுல் மூண்டெரிந்தது யேசுவின் திவ்விய இருதயம். ஆனுல் நீச மனிதராகிய நமது செயல்கள் எத்தகைய ஈனமானது என்பதை உணர்கின்ருேமா? நானிலத்தின் ஆசையுட்புகுந்து நவ

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

ஆசிரியர்: எவ். எஸ். சி.

## பூசை வழிகாட்டி

### ஆனி—1972.

26. திங்கள் : நாட்பூசை [ப]
வாசகங்கள் : 2அர. 17 : 5—8, 13—15, 18
மத். 7 : 1—5

27. செவ்வாய்: நாட்பூசை [ப]
வாசகங்கள் : 2அர. 19 : 9—11, 14—21, 31—36. மத். 7 : 6, 12—14

28. புதன்: புனித இரெனெயுஸ் [சி]
வாசகங்கள் : 2 அர. 22 : 8—13, 23: 1—3
மத். 7 : 15—20.

29. வியாழன். புனித இரா. சின்னப்பர் [சி]
வாசகங்கள் : அப். பணி 12 : 1—11
2 தீமோ. 4: 6—8, 17—18
மத். 16 : 13—19

30. வெள்ளி : நாட்பூசை [ப]
வாசகங்கள் : 2அர. 25 : 1—12
மத். 8 : 1—4

### ஆடி மாதம்

1. சனி : நாட்பூசை [ப]
வாசகங்கள் : புலம்பல் 2: 2, 10—14, 18—19
மத். 8 : 5—17

2. ஞாயிறு : ஆண்டின் 13ஆம் ஞா. [ப]
வாசகங்கள் : 2அர. 4 : 8—11, 14—16
உரோ. 6 : 3—4, 8—11, மத். 10: 37 —42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு

அன்புச் சோதரரே!

இளமைப்பருவம் இனிமைப் பருவம் என்று சிலர் கூறுவர். சோதனையும் வேதனையும் நிறைந்த பருவம் என்று பலரும் கூறக் கேட்டிருக்கிறோம். பருவத்தின் பூரிப்பிலே உருவத்தின் தோற்றத்திலே மட்டும் இளமையழகு தங்கியிருக்கவில்லை. உடல் அழகு வேண்டும்தான். ஆனால், உளத்தழகுதான் முக்கியத்துவம் பெறவேண்டும். ஏன்? அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா?

இளம் உருவங்கள் பலசேர்ந்து சமயப்பணியிலே சமூகப்பணியிலே, இளைஞர் அணியிலே முன்னின்று புரியும் பணிகள் கண்டு இளைஞர் உலகுமட்டுமல்ல அனைத்துலகுமே அக்களிப்படைகிறது. இப்பணிகளுடன் மட்டும் நில்லாது இளைஞரே சிலமணி நேரத்தை எழுத்துப் பணியிலும் செலவிட்டு சிறந்ததோர் சமுதாயத்தை உருவாக்க முன்வருவீர்களாக. இளைஞர் உலகு வளமுடன் திகழ நீங்கள் செய்ய வேண்டிய பெரும்பணி இதுவன்றோ!

அன்புத் தந்தையாம் சின்னப்பாப்புவின் தினம் அடுத்த வாரம் உலகெங்கும் கொண்டாடப்பட விருக்கிறது. அன்புத்தந்தைக்கு முன்கூட்டியே இளைஞர் உலகு தனது இதயபூர்வமான வாழ்த்துக்களைச் செப்பி நிற்கிறது.

சோதரன்

## எங்கள் அறிமுகம் அறியவைக்கும் அரிவை

கலைகளை வளர்க்கும் தன்மையும் ரசிக்கும் வண்மை என்னிடம்உண்டு. க. பொ. த. சா. பரீட்சையில் சித்தியடைந்தநான் சென் யோன் அம்புலன்சில்சேர்ந்து தாதிப் பயிற்சி பெற்று பின்னர் சென். அன்றூஸ் அம்புலன்சில் சேர்ந்து விசேட பயிற்சி பெற்று வருகிறேன்.

பாடசாலைப் பேச்சுப் போட்டியிலும் தாதிப் பரீட்சைகளிலும் நற்சான்றிதழ்கள் பெற்றேன். எவருடனும் சிரித்துப் பேசிப்பழகும் தன்மை கொண்டவள் நான், கலகலப்பாகச் சிரித்துப் பேசுவதே எனக்குப் பிடிக்கும். சமூகசேவை செய்வதே என் வாழ்வின் குறிக்கோள்.

பத்திரிகை படித்தல், முத்திரை சேகரித்தல், வீட்டு அலங்காரம், சமையல் என்பனவற்றின் குறிப்புகள் சேர்த்தல் என்பன எனது பொழுது போக்குகள். பேனா நண்பர் தொடர்புமுண்டு. ஆங்கிலத் தட்டெழுத்துப் பயின்றுள்ள நான் அதனைத் தொழிலாகக் கொள்ள விரும்பாது நாட்டுக்கும் நமக்கும் நன்மை பயக்கக்கூடிய கைத்தொழில் ஒன்றையே விரும்புகிறேன். எனது பங்கின் மறை ஆசிரியையாகக் கூடாதா என்று எண்ணத்தோன்றுகிறது. இதில் சேர்ந்து பணியாற்றவும் முயற்சிசெய்துள்ளேன்.

என் இறுதி மூச்சுள்ளவரை சமூகசேவையில் ஈடுபடுவதே என் இலட்சியம். என் இலட்சியம் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

செல்வி அ. ஜெயா
பர்னுண்டோ
கொழும்பு 13,

## இனிய யேசுவின் இதயம்

பாசம் நிறைந்த இதயம்—அது,
பாவம் போக்கும் இதயம்.
புதுமை நிறைந்த இதயம்—அது,
புனிதம் அளிக்கும் இதயம்.

●

தாழ்ச்சி நிறைந்த இதயம்—அது
தயவு அளிக்கும் இதயம்.
தூய்மை நிறைந்த இதயம்—அது,
துன்பம் துடைக்கும் இதயம்.

●

சிநேகம் நிறைந்த இதயம்—அது,
சிறுவரை அணைக்கும் இதயம்
சாந்தம் நிறைந்த இதயம்—அது
சாந்தி அளிக்கும் இதயம்.

●

கருணை நிறைந்த இதயம்—அது
களங்கம் போக்கும் இதயம்
காருண்யம் நிறைந்த இதயம்—அது
கவலை தணிக்கும் இதயம்.

●

இரக்கம் நிறைந்த இதயம்—அது
இரட்சணியம் நல்கும் இதயம்
இனிமை நிறைந்த இதயம்—அது
இனிய யேசுவின் இதயம்.

செல்வி தே. பற்றிமா,
உடுவில்.

## கடமை பற்றி கனவான்கள்

கடமையைச் செய்; அதுவே உண்மை இன்பம்
—நபிகள் நாயகம்.

ஏனையோரின் கடமைகளைச் சுட்டிக்காட்டுமுன் யாவரும் தமது கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்.
—படேல்.

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்**
**கத்தோலிக்க நற்சிந்தனை**
**ஆனி 24–25–26**
**நேரம் : காலை 6–25**
**பேசுபவர் : வண. பிதா ஹில்லறி ஜெபநேசன்**

# அக்காவின் அஞ்சல்

அன்புத்தம்பி!

நலம். நலம் வேண்டுவதும் அஃதே. அண்மையில் வெளியான கலைப் பரீட்சை முடிவுகளிலிருந்து நீ பரீட்சையில் முதன்மையாகத் தேறியிருப்பதை அறிந்து பெருமகிழ்வெய்துகிறேன். தம்பி படித்துப் பட்டம் பெற்றுவிட்ட நீ இப்போது வேலை தேடும் படலத்தை ஆரம்பித்திருப்பதாக அம்மா எழுதியிருந்தார். இந்த நேரத்தில் என் அறிவுரைகளும் உனக்கு தேவைப்படும் என்பதை உணர்ந்து இதை எழுதுகிறேன்.

தம்பி, குளிர் சாதனம் பொருத்தப்பட்ட அறையில், சுழல் விசிறிகளுக்குக் கீழேயிருந்து வேலை செய்தால்தான் பெருமை என்று நீ நினைத்தால் உன்னைப் போன்ற முட்டாள்கள் வேறில்லை என்றுதான் கூற வேண்டும். 'செய்யும் தொழில்தான் தெய்வம்.' நீ என்ன வேலை செய்தாலும், உன் திறமையான உழைப்பிலும், உன் நாணயமான நடத்தையிலும் தான் பெருமை தங்கியிருக்கின்றது.

தம்பி, இலங்கையில் பெரும்பாலான இளைஞர்கள், அலுவலக வேலைகளை மட்டும் விரும்புவதாற்றான், வேலையில்லாத் திண்டாட்டம் இன்று பலமடங்காகப் பெருகியுள்ளது. பொதுவாக மக்கள் கேவலமாக நினைக்கும் தொழில்களை உன்போன்று படித்த வாலிபர்கள் துணிந்து செய்தால் அத்தொழில்களின் தரமும் உயரும். அதனால் ஏற்படக்கூடிய பலன்களும் அதிகரிக்கும். எனவே தம்பி, உறுமீன் வரும்வரை காத்திருக்கும் கொக்கைப் போன்று, அரசாங்க வேலைகளுக்காக மட்டுமே காத்திருக்காது, நல்ல, நாணயமான, எந்தத்தொழிலாயினும் துணிந்து செய்.

தம்பி, இப்போதெல்லாம், நீ முன்போன்று தேவகாரியங்களில் அவ்வளவு சுறுசுறுப்பாக இருப்பதில்லை என்றும் அம்மா எழுதியிருந்ததைப்படித்த போது மனவேதனையடைந்தேன். அம்மா, கூறியதாக உனக்கு எழுதுவதால், நீ இதைபடித்ததும் கட்டாயம் அம்மாவுடன் ஒரு யுத்தமே நடத்துவாய் என்று எனக்குத் தெரியும். தம்பி — ஆதரவில்லாத அம்மாவுக்கு, உன்னையே தன் ஆதாரமாக நம்பிக் கொண்டிருக்கும் அம்மாவுக்கு, நீ இப்படி நடந்தால் எவ்வளவு வேதனையாக இருக்கும் என்று சிந்தித்துப் பார். மனக்குமுறல்களைத் தானே உள்ளடக்கி வேக முடியாமல் அம்மா எனக்கு எழுதியிருக்கிறார்.

தம்பி, முன்பு நீ பீடத்தில் குருவுடன் சேர்ந்து, பூசைப் பலியில் அவருக்கு உதவி செய்தபோது, நாம் எவ்வளவு சந்தோஷப்பட்டோம். மோட்சத்தில் இருக்கும் தேவதூதர்களைப் போன்று கள்ளம் கபடமின்றித் தேவ ஊழியம் செய்ததைப் பார்த்த போது எவ்வளவு ஆனந்தமாக இருந்தது. ஆனால் இப்போது, ஏன் தம்பி இப்படி மாறினாய்? உனக்குக் கல்வி வரத்தையும், அதனால் மற்றவர்களிடத்தில் உரிய மரியாதையையும் தேடித்தந்தது உன்னுடன் இருக்கும் யேசு. அவரின்றி ஓரணுவும் அசையாது. அப்படியிருக்க, உயரத்தில் ஏறியதும், உயர ஏற உதவியாக இருந்த ஏணியை தள்ளிவிடும் சிலரைப் போல் ஏன் மாறினாய்? நீ சிறப்படைய உனக்கு உதவியாக உன்னுடன் துணையிருந்த யேசுவை, இன்று ஏன் எட்டி உதைக்கிறாய்?

சினிமா, பார்ப்பதற்குக் காட்சி ஆரம்பமாவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னரே போகும் நீ, பூசைப்பலியில் பங்குபற்றுவதற்கு மிகத்தாமதமாகவே போவது ஏன்? உன் வாய்க்கு ருசியாக, வீதிகளில் விற்பனையாகிக் கொண்டிருக்கும் தின் பண்டங்களை, வாங்கி நாகரீகம் என எண்ணிக் கொண்டு, வீதிவழியே சுவைத்துத் திரியும் நீ, உன் ஆத்ம போசனத்தை வாங்கிக்கொள்ள — கடவுளின் விருந்துக்கான அழைப்பை ஏற்க ஏன் தயங்குகிறாய்; ஆத்துமத்தையும், அதன் வழியாக உன் சரீரத்தையும் பலப்படுத்தும் ஓர் அமிர்தம் அல்லவா திவ்விய நற்கருணை...!

தம்பி, இவைகளையெல்லாம் உன்னை குற்றம் சாட்டி, திட்டித் தீர்க்க வேண்டும் என்பதற்காக எழுதவில்லை; என் தம்பி, நல்லவனாக, நாட்டுக்கு உழைப்பவனாக வாழ வேண்டும்; பெற்ற தாய்க்கும், பிறந்த பொன்னாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் எழுதுகிறேன். 'குற்றம் செய்வது சகஜம். ஆனால் அதை திருத்தி வாழ்வதே மனிதப் பண்பு எனவே தம்பி, இதுவரை நீ நடந்து கொண்டவைகளை மறந்து, இனிமேல் நீ கற்ற கல்விக்கேற்ப சிறப்புற வாழ்வாய் என்று நம்புகிறேன்.

உன் நிலையை உணர்ந்து நீ எனக்கெழுதும் கடிதம் தான், எனக்கு ஆறுதலளிக்கும். உன் அன்பான பதிலுக்கும், தீர்க்கமான முடிவுக்காகவும் காத்திருக்கிறேன்.

உன் அன்பு அக்கா
வேஜில்

இளமைப் பருவத்தின் அகராதியில் தோல்வி என்ற சொல்லுக்கு இடமேயில்லை.
இலிட்டன்.

## கத்தோலிக்க மறைக்கல்வித் தமிழ்ப்பாட நூல்கள்

இலங்கைப் பாடசாலைகளில் பாவிக்கப்படும் வித்தியா பகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்ற நூல்கள் வரிசையில் அன்பின் ஆட்சி முதலாம் இரண்டாம் பாகத்தையும் சேர்த்து தவறுதலாகப் பிரசுரித்து விட்டோம். இவ்விரு நூல்களும் யாழ். மறைக்கல்வி குழுவினர்தீர்மானப்படி யாழ். மேற்றிராசனத்தில் மட்டும் உதவிநூலாக பாவனையில் இருந்துவரும். இதர மேற்றிராசனங்கள் இதனை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை அறியத்தருகிறோம்.

தவிர கவனிக்கப்பட வேண்டிய இன்னோர் முக்கிய அம்சம்: அரசினர் பாடத்திட்டப்படி சகல பாடசாலைகளும் 9-ம் வகுப்புக்கு(Prep. S. S. C.) கத்தோலிக்க திருமறை விளக்க (2-ம் பாகம்) த்தோடு லூக்காஸ் சுவிசேஷ (முதல் எட்டு அதிகாரங்கள்) த்தையும் பாடநூலாகச் சேர்த்துக் கொள்ளவும்.

அருட்திரு. ஜி. ரி. பாலசுந்தரம்,
ஒ. எம். ஐ.
யாழ். மறை மாவட்ட
மறைக்கல்வி
மேலாளர்.

**கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சி**

**சிறுவர் பகுதி—ஆனி**

**தமிழ்ச்சேவை—1**

**ஆனி 28,**

நேரம் மாலை 6-15
நடாத்துவர் : சகோதரி ஹென்றிக்கா (A. C.)
விடயம் : எமக்கு உதவி புரிந்த கிறிஸ்து நாமும் மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென விரும்புகிறார்.
பங்கு பற்றுபவர்கள் : வதிரி கத்தோலிக்க மாணவர்கள்.

✠

**யோசேவ் அந்தோனியாப்பிள்ளை**

அமரத்துவமடைந்த

## முதலாவது ஆண்டு மரணஞாபகம்

**இறப்பு: 27-6-1971**

சீவியத்தில் நேசித்தோம்
மரணத்தில் மறவோம்

எங்கள் வாழ்வை இனிதாக்கத்
தங்கள் வாழ்வைத் தந்தீரே
உங்கள் ஆன்மா ஆண்டவரில்
நீங்காதிருக்க வேண்டுகிறோம்.

யாழ். ஆசனக் கோவிலில் 27-ந்தேதி செவ்வாய்க்கிழமை காலை 6–15மணிக்கு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவியை இழந்து
கடுந்துயர் கொண்டேன்
சுவாம்பிள்ளை யோசேப்

தாயை இழந்து தவிக்கின்றோம்
பிள்ளைகள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மானிப்பாய் புனித அந்தோனியார்
## கோவிற் திறப்புவிழா

மானிப்பாயம்பதியில் நவமாக அமைக்கப்பெற்ற புனித அந்தோனியார் திருசேத்திரத் திறப்புவிழா வைபவம் சென்ற 17-ந்தேதி சனிக்கிழமை மாலை 6-30மணிக்கு யாழ். துணை ஆயர் வந்தனைக்குரிய எல். ஆர். அன்ரனி ஆண்டகை அவர்களின் திருப்பலிப்பூசையுடன் ஆரம்பமாயது. அவ்வமயம் இருபதின் மருக்கு மேற்பட்ட குரவர்கள், மற்றும் கன்னியர்களும், பிறமதத்தினருட்பட பல்லாயிரக் கணக்கான பக்தர்களும் சமுகமளித்து விழாவைச் சிறப்பித்து நின்றனர்.

தேவாலய முன்றில் பன்னிற மலர்மாலைகளாலும், பசுந்தளிர்களாலும் அலங்கரிக்கப்பட்டுப் பார்த்தோர் உள்ளங்களைப் பரவசப்படுத்திற்று. கோவிலையும்சுற்றுப்புறங்களை அலங்கரித்துப் பிரகாசித்தன மின்சார தீபங்கள். வர்ணக் கொடிகளாலும், வண்ணமலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த பலிபீடஸ்தானம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து நின்றது.

காலஞ்சென்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளால் தமது ஜனனபதியாகிய மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் அவர் மறைந்த 25 ஆண்டுகளின் பின்னர் ஒரு மகாதேவாலயமாக மானிப்பாய் தற்போதய பங்குக்குரவர் வண. எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளாரின் கடும் பிரயாசத்தாலும் விடாமுயற்சியாலும் அயராஉழைப்பாலும் நிறுவப்பட்டது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## திருக்குடும்பசபைக் கன்னியரின் நித்திய அர்ப்பணம்

ஆனித்திங்கள் 17-ம்நாள் யாழ்நகர் தேவாலயம் நறுமணத்தால் பூத்துக் குலுங்கியது. ஆலயமணிஓசைஒலிக்க, கீதவாத்தியங்கள் இன்னிசை எழுப்ப, கன்னியர் திலகங்கள் எழுவர் கையில் தீவர்த்தியுடன் மணவாளனை நோக்கி எதிர்கொண்டனர் பலிபீடத்திற்கு.

ஏந்தியவிளக்கு பீடத்தில் பிரகாசிக்க, யாழ்நகர் துணை ஆயர் ஆறுகுரவருடன் சேர்ந்து கூட்டுப்பலி நிறைவேற்றினார். நற்செய்தி வாசகம் முடிவுற்றதும், துணைஆயர் அவர்கள் துறவியரின் அர்ப்பணிப்பின் நோக்கம், சிறப்பு, பெருமை, கடமை என்பவற்றை விளக்கி உரை நிகழ்த்தினார். கன்னியரின் அர்ப்பண வைபவம் ஆரம்பமானது. ஆயர் அவர்கள் கன்னியர் ஒவ்வொருவரையும் தனித்தனியே அவர்களின் நோக்கம், அர்ப்பணிக்க முன்வந்த காரணம் இவற்றை வினவிச் சரியான பதில்மொழியைப் பெற்றதும் ஒவ்வொருவருக்கும் அவர்களின் அர்ப்பணத்தின் சின்னமாகிய மோதிரத்தை அளித்தார். எல்லோரும் மாகாணத்தலைவியின் உதவியுடன் அவற்றை அணிந்து கொண்டனர்.

அதன்மேல் கன்னியரும் பெற்றோரும் சேர்ந்து கடவுளுக்கு நன்றித்துதி செலுத்து முகமாய் காணிக்கை பொருட்களைக் கரமேந்தி பீடத்தை நோக்கிச் சென்று அவற்றை ஒப்புக்கொடுத்தனர். திருவிருந்தின்போது கன்னியர் இரு குணங்களிலும் தங்கள் அன்பரை உள்ளத்தில் பெற்றுக்கொள்ளும் பேற்றை அடைந்தனர். மாதாவின் புகழ்ச்சிக்கீதத்துடனும், ஆயரின் ஆசீர் உடனும் பலிபூசை முடிவுற்றது.

பின்னர் கன்னியர் தம் பெற்றோர், உற்றோர், உறவினர் சமுகமாய் அழகாக அலங்கரிக்கப்பட்ட புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்திற்கு அழைக்கப்பட்டு நன்கு உபசரிக்கப் பெற்றார்கள். அச்சமயம் அடைக்கலமாதா பாடசாலைத் தலைமையாசிரியர் ஜெறுகேசன் யோசேப்பு அவர்கள் கன்னியரின் அர்ப்பணத்தின் சிறப்பை விளங்கவைத்து நல்லுரை, ஆசிவழங்கினார்.

## நீங்கள் நிறைவு காணவில்லையா?

பீட்டரைப்பற்றி உங்களுக்குச் சொல்லவேண்டும்.

பீட்டர் ஒருகத்தோலிக்க இளைஞன், மத்திய ஆபிரிக்காவிலுள்ள ஒருசிறு கிராமம் தான் அவனது ஊர். அன்று அவன் அவ்வீட்டுக் கதவில் தட்டியபோது அவனது சாந்தமான முகத்தில் ஒரு கவலை கொண்டிருந்தது. கதவு மெல்லத் திறக்கப்பட்டது. உள்ளே சென்ற பீட்டர் அச்சிறு அறையை சுற்றுமுற்றும்நோக்கினான். சுவரில் பரிசுத்த தந்தையின் படத்தைக் கண்டதும் அவனது முகத்தில் ஒரு ஒளி தோன்றியது. அதேயே உற்று நோக்கியபடி நின்ற அவன் கதவு திறந்ததையோ, மேற்றிராணியார் உள்ளே வந்ததையோ உணரவில்லை. அவனைக் கண்டதுமே அவன் வந்த காரணம் ஆயருக்கு விளங்கிவிட்டது.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பீட்டர் ஆயருக்குத்தன் வரலாற்றைக் கூறினான். அவன் தனது கிராமத்தில் இருந்த குருவானவருக்கு உதவிபுரிவது வழக்கம். ஆனால், அவரது மரணத்திற்குப்பின் அக்கிராமத்தில் குருவானவர் இல்லை. பல மைல்களுக்கப்பாலிருந்து ஒரு குரவர் எப்போதாவது வருவார். பீட்டர் தன் கிராமத்துக் கத்தோலிக்கரை ஒன்று கூட்டி பிரார்த்தனைக் கூட்டங்கள் வைக்கவும் சிறியவருக்கும் பெரியவருக்கும் ஞானோபதேசம் கற்றுக் கொடுக்கவும் முயற்சிப்பான் "ஆனால் அவர்களுக்கு ஞானோபதேசப் பாடங்கள் போதாது. அவர்களுக்கு ஒரு குருவானவர் தேவை,

எனது மக்கள் கிறிஸ்துவை அறிந்து நேசிக்க வேண்டுமென விரும்புகிறேன். அதுவே கிறிஸ்துவின் விருப்பமும், நான் அவரது குருவாக ஆசிக்கிறேன்'' என்று பீட்டர் தனது ஆயரிடம் உருக்கமாக வேண்டினான். இதைக் கேட்ட ஆயரின் உள்ளம் வருந்தியது. அவர் பீட்டருக்கு உதவும் நிலையில் இல்லை, நிதிப்பற்றுக்குறைவால் அவரது குருமடம் மூடப்பட்டுவிட்டது. நாட்டின் வேறொரு பாகத்திலுள்ள குருமடத்திற்கு ஒரு கடிதம் தர அவர் உடன்பட்டார், ஆனால், அங்கும் அதே நிலைதான்.

நிதிப் பற்றுக் குறைவால் குருத்துவ வாழ்வை இழந்த எத்தனையோ இளைஞர்களுள் பீட்டரும் ஒருவன். ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையின் பணியால் சுதேச குருக்கள் கல்விப்பயிற்சிபெற வழிபிறந்துள்ளது. இலங்கை உட்பட அநேக நாடுகளில் சுதேச மக்களான குருமார் தேவைப்படுகின்றனர், குருவாக விரும்பும் எத்தனையோ இளைஞரும் இருக்கின்றனர்.

இவர்களுக்கு நீங்கள் செபங்களாலும் தியாகங்களாலும் உதவமுடியும். பெரிய குருமடத்தில் ஒருவர் பயிற்சி பெறும் ஏழு வருடங்களில் ஆகும் செலவின் ஒரு பகுதியையாவது நீங்கள் உதவி, ஒரு குறிப்பிட்ட மாணவனுக்குத் துணைபுரியலாம்.

1. பகுதி உபகார நிதி—ரூ. 75. மாதாந்தம் 7வருடத்துக்கு— அல்லது ரூ. 800. வருடாந்தம் 7 வருடத்துக்கு
2. பூரண உபகார நிதி—ரூ. 5000.
3. நிரந்தர உபகார நிதி— ரூ. 25000—இத்தொகை முடிவின்றி 7 வருடத்துக்கொரு குருவைப்பயிற்ற உதவும்.
4. கூட்டு உபகாரநிதி—மேற்கூறிய தொகைகளின் ஒரு பகுதி, அல்லது பலர் ஒன்று கூடி உதவும் நிதி,

**விபரங்களுக்கு :**

தேசிய இயக்குநர்,
பாப்பரசரின் வேத போதக உதவிச்சபைகள்,
29, பெரெய்ரா லேன்,
கொழும்பு 6.

✠

எங்கள் அருந்தவப் புதல்வி
**மிரியம் சாமினி அவர்களின்**
## 2-ம் ஆண்டு நினைவு

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 6—10—1962 | 26—6—1970 |

பொன்பூத்த முகமலர்ந்து
நாளுமெம்மை
நன்முத்தம் பலவுந்தந்து
மகிழ்வித்தாயே
அன்புள்ள மகளே மிரியம்
சாமினியே நீ
அகன்றுவிட்டாய் எம்மை
விட்டு யேசுபதம்
புண்பட்ட மனதுடனே
மறப்போமென்றால்
உன்னுருவோ எம்முன்னால்
நிற்குதம்மா
விண்ணிருந்து யேசுவிடம்
பரிந்துபேசப்
பிரிந்தாயோ பெற்றோர்விட்
டெட்டேயாண்டில்

பிரிவால் துயருறும் :

பெற்றோர் :

திரு. திருமதி சில்வெஸ்டர்.

சகோதரர் :

ஈவிலின், ரோணி, சாமலீன்.
சுருவில்

✠

நெடுந்தீவு மத்தி
**திருமதி ஏ. ரேசமுத்து**
அவர்களின்
## 3-ம் வருட ஞாபகம்

தயாபர யேசுவே! இவளது ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். முடிவில்லாத ஒளி இவளுக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாளாக.

இவளது ஆன்ம இளைப்பாற்றிக்காக வரும் 26-6-72 காலை நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் துக்கப் பாடற்பூசை நிறைவெய்தும். இதனைக் கண்ணுறும் வண. குருமார் சங். சந்நியாசர், கன்னியர், இனசனர், மற்றும் அனைவரும் இவளது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும் கணவர் :
சு. அந்தோனி, மற்றும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

**நன்றித் துதிகள்**

நான்கேட்ட வரத்தைப் பெற்றுத் தந்தமைக்கு புனித சூசையப்பரின் நாமம் என்றும் புகழப்படுவதாக. — அடியான்

* * *

நான் கேட்டவற்றைப் பெற்றுத்தந்த மண்கும்பான் புனித அந்தோனியாரின் புகழ்ச்சிக்காக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

— ஓர் அடியான்

* * *

பிறேக்நகர பாலயேசுவிடம் நான்கேட்ட மன்றாட்டு கிடைத்தமைக்கு நன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன். — அடியான்

✠

**ஸ்ரீ. ம. ப. சிங்கராயர்**
அவர்களின்
## 25-ம் வருட நினைவு

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 12-1-1897 | 30-6-1947 |

சீவியத்தில் இவரை நேசித்தவர்கள் — அன்பு கொண்டாடியவர்கள் அனைவரும் இவரின் ஆன்ம இரட்சணியத்துக்காகவும், குடும்ப சமாதானத்துக்காகவும் தேவனை வேண்டும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்தில் 30-6-1972ல் துக்கப் பாட்டுப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்,

இவர் மறைவை
துயருடன்நினைவுகூரும்
குடும்பத்தினர்.

6. சாள்ஸ் பிளேஸ்,
கொழும்பு 13.

**நன்றித்துதி**

மருதமடுமாதாவின் மன்றாட்டுதலால் நான் கேட்டவரம் கிடைத்தமைக்கு நன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன்.

— ஓர் அடியான்

## யேசுவின் திரு...

[2-ம்பக்கத் தொடர்ச்சி]

நாகரீக இன்ப அலைகளின் மேல் மிதந்து, நாணமின்றிப் பாவ உணர்வினை யூட்டும் ஆடைகளையணிந்து, அக்கிரம செயல்களைப் புரிந்து துர்க்குணங்களில் வளர்ந்து வருகின்றோம். ஆதலால் இன்றேநாம் நமது நன்றிகெட்ட நீசச் செயல்களையும், துர்க்குணங்களையும் அகற்றித் தேவநற்கருணையிற் சிநேகப்பலியாய் வீற்றிருக்கும் யேசுவின் திரு இருதயத்தை நமது விசுவாசக்கண்களால் உற்றுநோக்கி அந்தநேசஇருதயத்தின்முன் பாகத் துக்கமனஸ்தாபக் கண்ணீர் சொரிந்து பொறுத்தலை இரந்து வேண்டுவோம். உலக பாவ அக்கிரமங்களுக்காக நிந்தைப்பரிகாரம் செய்வோம். நம்மையே இருதயநாதருக்கு நல்மனதோடு அர்ப்பணித்து அவருக்கு ஆறுதல்அளிக்கப் புண்ணிய கருமங்களைப் புரிவோம்என்று வாக்களிப்போம். தூயதேவ இருதயத்திற்குத் தோத்திரம் புரிந்து அதனை வணங்கித் துதித்து ஆராதிப்போம். யேசுவின் மகா மதுரம்பொருந்திய இருதயத்தின் இனிமையை உணர்ந்து இவ்வுலக வாழ்விலே வெறுப்புற்று நித்திய நன்மையளிக்கும் புண்ணிய கருமங்களில் விருப்புற்று முழு நம்பிக்கையுடன் யேசுவின் திரு இருதயத்தை அண்டிச்சென்று நமது இரட்சணியத்தை அடைய இடைவிடாது முயல்வோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஹு ஆனி மாதம் 24-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org